MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – II ISSUE – 2 FEB -2025
E-ISSN : 2584 - 1238

# சுந்தரராமசாமி சிறுகதைகளில் மனித உறவுகள்

முனைவர் **க. ரெங்கலெட்சுமி** எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எட்., பி.எச்.டி.,நெட்,செட்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

DOI 10.5281/zenodo.15171466.

**Abstract :**

Relationship is another name for the power that brings together religion, language, race, country, culture, customs, etc. into one circle.Relationship is related to the human mind. Relationship gives life to life. The human mind is subject to joys and sorrows. Therefore, this relationship, which is formed in the capital of the human mind's qualities, takes place in human life in a stable and fulfilling way.The family fulfills all the biological, psychological, and life-related needs of people.

**KeyWords :** Sundara ramasamy - Short Stories - Human Relationship

சு.ரா. சிறுகதைகளில் காணப்படும் உறவுமுறைச் சித்தரிப்புகளை ஆய்வதாய் இக்கட்டுரை அமைகின்றது.

**குடும்ப உறவுகள் :**

“மதம், மொழி, இனம், நாடு, பண்பாடு, பழக்கவழக்கங்கள் முதலியவற்றை ஒரே வளையத்திற்குள் வலம்வரச் செய்யும் ஆற்றலின் மறுபெயர்தான் உறவாகும்.”1

உறவு என்பது மனிதனின் மனத்தோடு தொடர்புடையது. உறவு வாழ்வுக்கு உயிர் கொடுக்கும். மனித மனமானது, இன்ப துன்பங்களுக்கு ஆட்பட்டவை. எனவே தான் மனித மனத்தின் குண இயல்புகளின் மூலதனத்தில் உருவாகும் இந்த உறவானது நிலையானதாகவும், நிறையற்றதாகவும் மனிதவாழ்வில் இடம்பெறுகின்றன.

குடும்பம் மக்களின் உயிரியல், உளவியல், வாழ்வியல் சார்ந்த அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்கின்றது.

“குடும்பம் என்ற சொல்லுக்கு உறவு, குலம், குடி இனத்தார்
ஒரு குடியில் உள்ளோர், மனைவி, வீடு, சம்சாரம் உறவினர்”2

என்று அகராதி பொருளுரைக்கிறது. சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும் குடும்பம் அடிப்படையானது. சமுதாய நடவடிக்கைகளுக்குச் சட்ட திட்டங்களை ஏற்படுத்தி அவைகளைப் பின்பற்றச் செய்வது குடும்பமே ஆகும்.

**குடும்ப அமைப்பு**

மனிதன் தனக்கென்று ஒன்றினை உடைமையாக்க வேண்டும் என்று எண்ண நினைத்த காலத்தே அமைப்பு உருவாகியது.

“இரத்த உறவினாலோ மணஉறவினாலோ அல்லது சுவீகாரத்தினாலோ பிணைப்புண்ட இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மனிதர்கள் சேர்ந்து வாழும் அமைப்பு குடும்பம் என்று வரையறை செய்யப்படுகின்றது.”3



http://Creativecommons.org//license/by/4.0/.

இவ்வகைப்பட்ட குடும்ப அமைப்பு கூட்டுக்குடும்பம். தனிக்குடும்பம் என இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டது.

"ஓர் ஆணும் பெண்ணும் கணவர் - மனைவி என்ற உறவை ஏற்படுத்திக் கொள்ளும் பொழுது தான் அவர்கள் ஒரு குடும்பமாக அமைகிறார்கள். அவர்கள் ஒரே கூறையின் கீழ் உண்டு வாழ்ந்தாலும், காலத்தின் கட்டாயத்தால் தனித் தனியாக உண்டு வாழ்ந்தாலும் கணவர் - மனைவி என்னும் பிணைப்பைக் கொண்டுள்ளவரை அவர்கள் குடும்பம் என்னும் அமைப்பைக் கொண்டவர்களேயாவர்."4 என்று பக்தவத்சலபாரதி விளக்கம் தருகிறார். குடும்பம் என்னும் அமைப்பு இடம்,காலம் அனைத்தையும் கடந்து எல்லாப் பண்பாடுகளுக்கும் பொதுவான ஓர் உலகளாவிய பண்பாகத் திகழ்கிறது.

**தனிக்குடும்ப அமைப்பு :**

கணவன் - மனைவி அவர்களுடைய குழந்தைகள் அடங்கிய குடும்பத்தைத் "தனிக்குடும்ப அமைப்பு" என்பர். சமூக நிலையமைப்பின் கருவாகக் குடும்பம் விளங்குகிறது. சமூக நிலையமைப்பின் தோற்றத்திற்கே குடும்பம் தான் அடிப்படை அலகாக அமைகிறது. சமூக நிலையமைப்பு உருவாவதற்குக் குடும்பம் தான் கருவாக, அடிப்படை அலகாக அமைகிறது.

**"பெற்றோர் இறந்த பிறகு உடன்பிறந்தோர் தனித்தனியே செல்லும் நிலையையும், பெற்றோர் இறந்த பின்னர் அந்த வீட்டிலேயே மகனும் மருமகளும் வாழும் நிலையையும் தனிக்குடும்பம் என்பர். பெற்றோர் உயிருடன் இருக்கும்பொழுதே மகன் வேலை காரணமாக வெளியூரில் அல்லது ஒரே ஊரில் தன் மனைவி குழந்தைகளுடன் தனியாக வாழ்வதும் தனிக்குடும்பமாகும்."**5

**கூட்டுக்குடும்ப அமைப்பு**

கூட்டுக்குடும்பம் என்பது இரத்த உறவுடைய மக்கள் சேர்ந்து வாழும் குடும்பம் ஆகும். அதனை மானிடவியலார், **"சமுதாயங்களில் ஒரு கூரையின்கீழ் பெற்றோரும் அவர்களின் மணமானமக்களும் சிலவேளைகளில் பெற்றோரின் உடன்பிறந்தோரும் அவர்களின் மக்களும் வாழ்வதுண்டு. இவ்வாறு நேர்வழியிலும் கிளைவழியிலும் உறவினர்கள் ஒன்று சேர்ந்து வாழும் குடும்பம் கூட்டுக்குடும்பம்."**6 என வரையறுப்பர்.

**"கூட்டுக்குடும்பம் என்பது ஒரே கூரையினடியில், பொதுச்சொத்தில் ஒரே சமையலறையில் சமைத்து, ஒரே உணவு அறையில் உண்டு, ஒரே வழிபாட்டு அறையில் வழிபாடு செய்யும் உறவினர்களைக் கொண்டது."**7 என்ற விளக்கமும் தருவர்.

கூட்டுக்குடும்பம் அமைப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட தம்பதியர்கள் இருப்பதாகவும் அல்லது ஒரு தம்பதியரும் அவர்களுடைய இரத்தத் தொடர்பான உறவினர்கள் இருப்பதாகவும் உள்ள இரண்டு நிலைகளை சு.ரா. படைத்துள்ளார்.

**குடும்பத்தின் சிறப்பியல்புகள்:**


http://Creativecommons.org//license/by/4.0/.

மனிதனுடைய தேவைகளை நிறைவேற்றி அவனது வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக் கொடுப்பதில் பெரும்பங்கிற்குரியது குடும்பமேயாகும். அத்தகு, குடும்பத்தின் சிறப்பியல்புகளை வாழ்வியல் களஞ்சியம் பட்டியலிட்டுத் தருகிறது.

**“1.குடும்பம் ஓர் உலகளாவிய குழு ஆகும்.**

**2.குடும்பம் உணர்ச்சியின் அடிப்படையில் அமைகிறது.**

**3.குடும்பம் சமூகநெறிகள், சட்டவிதிகள் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் அமைகிறது.**

**4.குடும்ப உறுப்பினர்களிடையே வேறு எந்தக் குழுவிலும் காணப்படாத பொறுப்புகள் உண்டு.**

**5.குடும்பத்திற்குஒருவரைமுறையானஅளவுஉண்டு.**

**6.குடும்பமுறைஎன்பதுஉலகில் எங்கும் நிலவுகிறஒருநிலைப்பேருள்ள நிறுவனம்.”8**

குடும்பத்தில் கணவன் - மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் இருக்கவேண்டும். **“குடும்ப உறவுநிலை தொடர்ந்து நிலைபெறுவதற்கு மனமுதிர்ச்சியே காரணமாகும். பரந்த மனப்பான்மை, விட்டுக்கொடுக்கும் தன்மை, அன்பு, இரத்த உறவுத் தொடர்பு ஆகியவையே ஏதவாகும்.”9** என்று கோமதி சங்கர் குறிப்பிடுகிறார்.

**சு.ரா.வின் கதைகளில் தனிக்குடும்ப அமைப்பு**

‘அகம்’‘ முதலும் முடிவும்’ போன்ற கதையில் தனிக்குடும்பங்களாக வாழ்க்கை நடத்துகின்றனர். ‘வாசனை’ என்ற கதையில் லலிதா, சாம்பசிவன் என்ற தம்பதியினர் தனிக்குடும்பமாக வாழ்கின்றனர். கூட்டுக்குடும்ப ஒற்றுமையைப் பார்த்து தானும் கூட்டுக்குடும்பத்திற்குள் நுழையவேண்டும் என்று லலிதா விரும்புகிறார்.

**சு.ரா.வின் கதைகளில் கூட்டுக்குடும்ப அமைப்பு**

‘பக்கத்தில் வந்த அப்பா’ என்ற சிறுகதையில் பாலுவின் பெரியப்பா ராஜூவின் குடும்பம் பதினான்கு பிள்ளைகளுடனும் முப்பது பேரன் பேத்திகளுடனும், ‘விகாசம்’ என்ற கதையில் ராவுத்தர் நான்கு மகள், பதினாறு பேரன் பேத்திகளுடன் கூட்டுக்குடும்பமாக வாழ்கின்றனர். இதனைச் சான்று வாயிலாகக் காண்போம்.

**“ராஜூ பெரியப்பாவின் குடும்பம் கொஞ்சம் பெரியதுதான் ‘ஒண்ணேகால் டஜன்’ என்பர் பெரியப்பா. அது உயர்வுநவிற்சி. உண்மையில் பதினாலு குழந்தைகள் தான். பெரியப்பாவுக்குச் சுமார் முப்பது பேரன் பேத்திகள் இருந்தார்கள். ஒரே அடுக்களை, ஒரே சமையல், இந்தப் பின்னனியில் இருக்கும் பெரியப்பாவுக்கு எங்கள் வீட்டுத் தங்கல் மிகுந்த ஆசுவாசமாக இருக்கும் என்பதில் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சிறிதும் சந்தேகமில்லை.”** (பக்கத்தில்


http://Creativecommons.org//license/by/4.0/.

**வந்தஅப்பா**, ப.545) என்ற பாலுவின் கூற்று வாயிலாக ராஜூ பெரியப்பாவின் கூட்டுக்குடும்ப வாழ்க்கைமுறையை அறியமுடிகின்றது.

**குடும்ப உறவுநிலை**

மனிதர்களின் அக உலகாம் வீட்டில்,தங்களது குடும்பத்தினர், நண்பர்களோடு கொள்ளும் உறவுநிலை. குடும்ப உறவுநிலை ஆகும். குடும்ப உறவுநிலையில் நடுநாயகமாக இருந்து பங்காற்றுபவர் பெண் ஆவாள்.

திருமணத்திற்கு முன்னும் பின்னும் ஒரு பெண் சந்திக்கும் குடும்ப உறவுநிலைகள் சித்தரிக்கப்படுகின்றன. சு.ரா. சிறுகதைகளில் குடும்ப உறவுநிலையானது, தனிக்குடும்ப வாழ்வமைப்பிலேயே அமைந்துள்ளது. அவ்வகையில்,

**அ. கணவன் - மனைவிஉறவுநிலை**

**ஆ. தாய் - மகன் உறவுநிலை**

**இ. தந்தை - மகள் உறவுநிலை**

**ஈ. தாய் - மகள் உறவுநிலை**

**உ. தந்தை - மகன் உறவுநிலை.**

போன்ற உறவுநிலைகள் காணப்படுகின்றன.

**கணவன்-மனைவி உறவுநிலை**

கணவன் - மனைவி உறவு என்பது பல சிக்கல்களை உள்ளடக்கமாகக் கொண்டு உருவாவது. மனைவி என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று கணவனும், கணவன் என்றால் இப்படித் தான் இருக்க வேண்டும் என்று மனைவியும் தங்களது மனநிலையை மையமாக வைத்து நினைப்பதே சிக்கலின் களமாகிறது. அதனால்தான், **"கணவன் - மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் சரிவர உணராமலேயே இல்வாழ்வு சீர்கெடக் காரணம்"**10 என்பர்.

கணவன் - மனைவி இடையேயான சிக்கலை சு.ரா. 'கைக்குழந்தை' என்ற சிறுகதையில் படம்பிடித்துக் காட்டுகிறார். கணவன் உடல்நிலை சரியில்லாதவர் என்பதால் எங்கும் வெளியில் செல்ல அனுமதித் தர மறுக்கிறார். மனைவியை மீறிச் சுற்றுலா செல்கிறார். உடல்நிலை மிகவும் மோசமாகிறது. அந்நிலையில் இருவருக்கும் இடையே பிரச்னை ஏற்படுகிறது.

**"என்ன பேச மாட்டியோ-**

**"பேசாம என்ன!"**

**"இல்லை, வாயைத் திறக்கமாட்டியோ?"**

**"உறீம்… அப்படியொன்னமில்லை"**

**"நீ சொன்ன மாதிரி நடந்து போச்சுங்ற ரசிப்போ?"**

**கண்களிலிருந்து பொலபொலவென்று நீர் கொட்டிற்று உள்ளே மறைந்தான்"** (கைக்குழந்தை, பக். 72-73) என்று ராஜிக்கும் அவள் கணவனுக்கும் இடையே ஏற்படும் சிக்கலைச் சு.ரா. குறிப்பிடுகிறார்.

**தாய் - மகள் உறவுநிலை**


http://Creativecommons.org//license/by/4.0/.

தாய்மை சிறப்பிற்குரியது. அது தெய்வீகத் தன்மையுடையது. ஒரு தாய் தன் குழந்தைகளின் நலனில் அக்கறை கொண்டிருப்பாள். அதையே 'அகம்', 'கிடாரி', முதலும் முடிவும், காலிப்பெட்டி, இரண்டு முகங்கள், ஒன்னும் புரியவில்லை போன்ற சிறுகதைகளில் சித்திரித்துள்ளார்.

'அகம்' என்ற கதையில் கணவன் ஒவ்வாத நேரத்தில் அம்புஜம் மற்றொரு ஆணுடன் தொடர்பு கொள்கிறாள். குழந்தை ஜானுவை அடிக்கிறாள். அவளைப் பாதுகாப்பதே கிடையாது. குழந்தை ஜானுக்கு உடல்நிலை சரியில்லாமல் மோசமாகி விட்ட நிலையில் அம்புஜத்திற்குத் தன்னையறியாமலே தன் குழந்தை மீது ஒருவித பாசம் ஏற்படுகிறது. மற்றொரு ஆணுடன் கொண்ட உறவைக்கூட உதறித் தள்ளுகிறாள்.

**"அம்பு மாடிக்கு வா"**

**"ஐயோ வேண்டாம். குழந்தை இப்படிக் கிடக்கிறபொழுதா? எனக்கு மனதை என்னவோ செய்கிறது. உடம்பெல்லாம் பறக்கிறது." (அகம், ப.101)**

**"குழந்தையின் பக்கம் திரும்புவது எனக்கு மிகக் கஷ்டமாக இருந்தது. பார்க்காமலும் இருக்க முடியவில்லை. அது எப்போதும் விரும்பி அணியும் பூப் போட்ட சட்டை அணிந்திருந்தது. கூர்ந்து கவனிக்காத வரையிலும் தூங்குவது போல் தோன்றிற்று." (நெருக்கடி, ப.630)**

இப்பகுதிகள் குழந்தைப்பாசம். தாய் -சேய் உறவு போன்றவற்றை வெளிப்படுத்துகின்றன.

**தந்தை - மகன் உறவுநிலை**

ஒரு குடும்பத்தில் தந்தையானவன் பொறுப்புமிக்கவனாகவும், பிள்ளைகளின் எதிர்கால வள வாழ்வுக்குத் திட்டமிடுபவனாகவும் இருக்கிறான். சு.ரா. சிறுகதைகளில் தந்தை - மகன் உறவுநிலை தெளிவாகப் பல கதைகளில் வெளிப்படுகிறது.

'ப.வ.அ.' என்ற கதையில் பாலுவும், அவனது அப்பா சங்கரனும் எதிரும் புதிருமாக இருப்பார்கள். பாலு தனது தந்தையைக் கண்டு அஞ்சுவான். தந்தையின் அன்பிற்கு ஏங்குவான். நாளடைவில் பெரியப்பா இறந்த செய்தி ஃபோன் மூலம் வந்தபோது, அப்பா நெருங்கி வந்து பேசிய போது பாலு மிக்கமகிழ்ச்சி அடைந்தான். உளவியல் ரீதியாகத் தந்தை - மகன் உறவு நெருக்கமாக இராது.

**"சட்டையைப் போட்டுக் கொள்வதற்குஎன்னடாமண்டு"என்றுஅவர் கேட்டார். அதுஅவர் வழக்கமாகச் சொல்லும் 'மண்டு'அல்ல. அன்பில் தோய்ந்தெடுத்த'மண்டு'. "இதோபோட்டுண்டுவரேன்"என்றுசொல்லிவிட்டுப் பின்திரும்பிப் பாயஆயத்தமானேன். "சரிசரிவேண்டாம்.சின்னப் பயல்தானேநீ"என்றார். 'சின்னப்பயல்'என்றுஅவர் என்னைச் சொன்னதுரொம்பசந்தோஷமாக இருந்தது." (பக்கத்தில் வந்தஅப்பா, பக். 548-549)** போன்ற பகுதிகள் தந்தை - மகன் பாசம் உறவினை வெளிப்படுத்துகின்றன.

**தாய் - மகன் உறவுநிலை**

தாய்ப்பாசம் என்பது மனிதகுலத்தில் உயர்ந்த உறவாகும். குழந்தைகள் வளரும் நிலையில் தாயின் அன்பையும், அரவணைப்பையும் பெரிதும் எதிர்பார்க்கின்றனர். அதேசமயம் குழந்தை தாயின்


http://Creativecommons.org//license/by/4.0/.

சொற்படிக் கேட்காதிருக்கும் போதும், கீழ்ப்படியாமை கொள்ளும் போதும் தாய் தன் குழந்தையைக் கண்டிப்பாள்.

இத்தகைய தாய் - மகன் உறவுநிலையைச் 'சன்னல்', ர.த.ஓ.' ,டா.தா.கை போன்ற கதைகளில் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

**'சன்னல்' என்ற கதையில் தாய் - மகன் உறவுச் சித்தரிப்பைக் காண்போம்.**

**"குளவி நாசியில் ஏறி, நெற்றிப் பொட்டை நோக்கி ஊர்ந்து கொண்டிருந்தது.**

**"அம்மா!"**

**என்னுடைய உட்செவிக்குள் தான் என்குரல் எதிரொலித்தது.**

**அப்பொழுது தான் என் தாய் வாசலில் வந்து நின்றாள்.**

**"அம்பீ!" என்று கத்திக்கொண்டே எனக் கருகே வந்தாள்.**

**புடவைத் தலைப்பால் முகத்தைவிசிறினாள்.**

**புடவைத் தலைப்பால் முகத்தைத் துடைத்தாள்.**

**அவள் கண்களிலிருந்துகுருதிதான் வழிந்தது." (சன்னல், ப.134)**

தனது குழந்தைக்கு ஏதோ நேரப் போகிறது என்பதை அசரிரீ அறிவித்தது போல் பதற்றத்துடன் குழந்தை அருகே வந்து கவனித்தாள். தாய்ப்பாசம் வெளிப்படுகிறது. இவ்வாறு தாய் - மகன் உறவுநிலையைச் சு.ரா. பல கதைகளில் சித்தரித்துள்ளார்.

**தந்தை - மகள் உறவுநிலை**

தந்தை - மகள் உறவு என்றால் அதீத பாசம் கொண்டது. உளவியல் ரீதியாகத் தாய்க்கு மகனைப் பிடிக்கும். தந்தைக்கு மகளைப் பிடிக்கும் அவ்வாறே சு.ரா. கதைகளில் தந்தை - மகள் உறவு மிகுதியாக இடம்பெற்றுள்ளது.

'அகம்', 'பிரசாதம்'. 'கிடாரி', 'ரயில் தண்டவாளத்தில் ஓடும்', 'மெய்க்காதல்',' 'லீலை', 'காலிப்பெட்டி', 'விகாசம்;' ,'பக்கத்தில் வந்தஅப்பா" போன்ற கதைகளில் தந்தை மகள் உறவு உன்னதமாகக் காணப்படுகிறது. 'அகம்' என்ற கதையில் ஜானுவின் தந்தை கடிதம் எழுதியதிலிருந்து தந்தை-மகள் உறவு புலப்படுகிறது.

**'கல்கத்தாவிலிருந்து அப்பா கடிதமெழுதியிருக்கிறார். 'ஜானுவைப் பார்க்காமலிருப்பது மிகவும் சிரமமாகத்தானிருக்கிறது. நேற்று பார்க் பக்கம் போயிருந்தேன். வங்காளப் பெண்ணொன்று நின்று கொண்டிருந்தது. அசல் நம்ம ஜானு மாதிரியே இருந்தது. அப்படியே கண்கள் நிறைந்து விட்டது. ஒரு பாக்கெட் பிஸ்கட் வாங்கிக் கொடுத்தேன் அந்தப் பெண்ணிற்கு. ஜானுவிடம் அன்பாய் நடந்துகொள். கோபித்து விட்டு பின்னால் வருந்தாதே. மாலை வேளைகளில் அவளை வெளியே கூட்டிக்கொண்டு போ. என்னுடைய உடல் மட்டும் தான் இங்கு திரிந் துகொண்டிருக்கிறது. ரூபாயும் அனுப்பி வைக்கிறேன்." (அகம், ப.96)** என்பதன் வாயிலாக ஜானுவின் தந்தை பாசம் வெளிப்படுகிறது. இதுபோலவே பலகதைகளில் உறவுநிலைகள் சித்தரிக்கப்படுகின்றன.

**முதலாளி - தொழிலாளி உறவுநிலை**


http://Creativecommons.org//license/by/4.0/.

உழைக்கும் வர்க்கம் நாட்டின் முதுகெலும்பாகச் செயல்படுகிறது. இப்பாட்டாளித் தோழர்களின் வாழ்க்கை வளம் பெறாமலேயே அமைகின்றது.

**“உழைக்குக் கூடியதொழிலாளர் வர்க்கமேசமுதாயத்தை இயக்கும் சக்தியாகத் திகழவேண்டும் என்பது மார்க்சியக் கொள்கை”11**

இந்தியத் தொழிலாளர்களின் நிலைமிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளது.

‘பொ.வ’, ‘விகாசம்’ போன்ற கதைகளில் முதலாளி - தொழிலாளி நிலை வெளிப்படுத்தப்படுகின்றது. ‘பொ.வ’ என்ற கதையில் முதலாளியின் மகனைச் ‘சின்னமுதலாளி’ என்று அழைக்கின்றனர். இவன் எச்சில் இலை திண்ண வந்த பையனைத் தனது அதிகார வர்க்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு தாறுமாறாக அடித்து நொறுக்குகிறான். முதலாளிகளின் அடக்குமுறை, ஆணவச் செருக்கு, பிறரை அடிமைப்படுத்தும் நிலை போன்றவற்றை இக்கதை வெளிப்படுத்துகிறது.

**“ஓட்டலுக்குள் நுழைந்து விட்டால் ஒரே ரகளை தான். சர்வர்களுக்கு வரிசையாக நாமார்ச்சனை, மேஜை துடைக்கும் பையன்களின் தலை வீங்கிவிடும். பிறர் துன்பத்தில் இன்பம் காணக்கூடிய தன்மையை நன்றாக உரம்போட்டு வளர்த்திருந்தான் அந்தப் பையன்”(பொறுக்கிவர்க்கம், ப.45).**

என்ற கூற்றின் வாயிலாக முதலாளியானவர்களின் அதிகாரப் போக்கு, தொழிலாளர்களை அடித்துச் சித்திரவதைப்படுத்தும் நிலை தெரியவருகிறது. முதலாளி - தொழிலாளி உறவு நெருக்கமாக இராது என்பது உலக இயல்பு.

**மாமனார் - மருமகன் உறவு**

சு.ரா. சிறுகதைகளில் மாமனார் - மருமகன் உறவைப் பெரும்பாலும் இனிய உறவாகக் காட்டவில்லை. கசப்பும் வெறுப்பும் விரவிக்கிடக்கின்றஉறவாகத்தான் காட்டுகிறார்.

சான்றாகக் ‘கிடாரி’கதையைக் கூறலாம்.

கிழவரும்,மருமகன் சபேசய்யரும் கீரியும் பாம்பும் போல் அமைவதைக் கதை வெளிச்சப்படுத்துகிறது.

**“மாப்பிள்ளை மகா முன்கோபி என்பது கிழவர் அபிப்பிராயம். கிழவரும் இங்கிதமே தெரியாதென்பது சபேசய்யர் தீர்மானம். சபேசய்யர் வருமானவரி ஆபீஸர் வேலையிலிருந்து ரிட்டயராகி பொழுதை வீட்டிலேயே செலவு செய்யும் நிலை ஏற்பட்டதும், அரமும் அரமும் உரைத்தாற் போல் இருவர் உறவும் கீறிச்சிட்டது. முகதரிசனம் வாய்த்த மறுவினாடியே பரஸ்பரம் வெட்டிக் கொண்டார்கள். மடக்கி மடக்கித் தாக்கிக் கொண்டார்கள். படீரென்று விலாவில் மடக்கிக் குத்துவார் மாப்பிள்ளை. மண்டையில் ஓங்கி அறைவார் மாமனார். எல்லாம் வார்த்தைகளில் தான். பெண்ணை வைத்துத் தானே கிழவருக்கு அந்த வீட்டில் மதிப்பு” (கிடாரி, பக். 160-161).**

**மாமியார் - மருமகள் உறவு**


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – II ISSUE – 2 FEB -2025
E-ISSN : 2584 - 1238

மாமியார் - மருமகள் என்பது காலம் காலமாகப் பிரித்து வைத்துப் பார்க்கப்பட்ட ஒரு வகை உறவு. இவர்களுடைய உறவு எப்பேர்பட்டவர்களாக இருந்தாலும் நெருக்கமாக இராது எதிரும் புதிருமாகத் தான் இருக்கும். குடும்பத்தில் இவர்களுக்கிடைய சண்டைசச்சரவு இருக்கத்தான் செய்யும். மாமியார் - மருமகள் சண்டை எங்குப் பார்த்தாலும் பேசக்கூடிய ஒரு பிரச்சனை. இத்தகைய மாமியார் - மருமகள் உறவு பற்றிச் சு.ரா.வும் தன்னுடைய 'ஒ.பு', 'கிடாரி' என்பது போன்ற கதைகளில் அம்பலப்படுத்துகிறார்.

'ஒ.பு' என்ற கதையில், **"அக்காளுடன் ஒருநிமிஷம் பேச முடியாதபடி அவளுக்கு வேலை எல்லா வேலையும் அவள் தலையில் தான்;. வீட்டில் அக்கா தண்ணீர் இறைத்து அவன் பார்த்ததில்லை. புடவை துவைத்தும் அவன் பார்த்ததில்லை. 'இப்போதிருந்தே அவள் காரியம் செய்து உடம்பைக் கெடுத்துக் கொள்ளணுமா?" என்பாள் அம்மா. இங்கே எடுத்ததற்கு எல்லாம் அக்கா தான். 'பங்கஜம், சோத்தை வடிச்சயோ?" 'பங்கஜம் கறிக்குநறுக்கினயோ?" பங்கஜம், பெருக்கித் தள்ளவேண்டாமோ?' என்ன மாமி இது? எல்லா வேலைகளையும் எங்க அக்கா தான் செய்ய வேண்டுமோ? நீங்கள் மட்டும் காலை நீட்டி வம்பளந்து கொண்டிருப்பீர்களாக்கும்!" ('ஒ.பு',பக்.196-197)** என்று அம்பி தன் அக்காவை, மாமியார் வேலை வாங்கிக் கொடுமைப்படுத்தும் விதத்தை எதிர்த்துக் கேட்பதாக அமைந்துள்ளது. பெண்கள் பிறந்த வீட்டில் செல்லமாக வளர்ந்து திருமணமாகிச் சென்ற வீட்டில் படும் கொடுமைகளை ஆசிரியர் இக்கதையில் அம்பலப்படுத்துகிறார்.

ஆசிரியர் - மாணவன் உறவு

சமூகத்தில் மிக நெருங்கிய உறவு ஆசிரியர் - மாணவன் உறவுநிலை. அவ் உறவுநிலை தவிர்க்கமுடியாத ஒன்று. அதையே சு.ரா. 'எ.டீ',
'நா.சா' என்ற கதைகளில் குறிப்பிட்டுள்ளார்.

**"கீழ் வகுப்பிலிருந்து கைகளைத் தரையில் ஊன்றி நகர்ந்து நகர்ந்து வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறது" என்றார்.**

**அசட்டுச் சிரிப்புச் சிரித்தோம்.**

**"போனது போகட்டும், மேல் வகுப்புக்கு அத்தனை பேரையும் சிப்பாய் மாதிரி அணிவகுத்துப் போக வைக்க என்னால் முடியும்" என்றார்.**

**கைதட்டாத குறை தான். மகிழ்ந்து போனோம். கணநேர மௌனத்துக்குப் பின், "உங்கள் ஒத்துழைப்பும் கொஞ்சம் தேவை" என்று சொல்லி முடித்தார். வெகுஅழகாக இருந்தது.**

**"தலைகள் பலமாக அசைந்தன.**

**முதல் நாளே அவர் எங்களை முந்தானையில்**

**கட்டிக் கொண்டுவிட்டார்" (எங்கள் டீச்சர், ப.244)**

இவ்வாறு இரண்டு கதைகளுமே மாணவர்களுக்கு ஆசிரியர்கள் நம்பிக்கையூட்டும் உறவாக அமைந்துள்ளது எனலாம்.

முடிவுரை


http://Creativecommons.org//license/by/4.0/.

சு.ரா.வின் கதைகள் பல்வகைப்பட்ட குடும்ப உறவுகளையும், சமுதாய உறவுகளையும் வெளிப்படுத்திச் சிறந்த சமூக, எதார்த்த கதைகளாகச் சிறந்து காணப்படுவதோடு, ஆசிரியரையும் சிறந்த சமுதாய அக்கறைச் சார்ந்த எழுத்தாளராக அடையாளப்படுத்துகின்றன எனலாம்.

அடிக்குறிப்புகள்

1.அ. சோமசுந்தரன்,நீல. பத்மநாபன் நாவல்கள் - ஒருதிறனாய்வு, ப.14.

2.கதிரைவேற் பிள்ளை (தொ.ஆ),தமிழ்மொழிஅகராதி, ப. 343.

3.சேதுமணியன்,தமிழ் நாவல்களில் மதிப்புகள், ப. 60.

4.பக்தவச்சலபாரதி,பண்பாட்டுமானிடவியல், ப. 352.

5.சித்ரலேகா, லட்சுமி சூடாமணி நாவல்கள்(சமூகவியல் ஒப்பாய்வு அடிப்படையில் ஆராய்ச்சி), ப. 155.

6.பக்தவச்சலபாரதி, மு.நூ., ப. 368.

7.சித்ரலேகா, மு.நூ., ப. 155.

8.அ.மா. பரிமாணம் (ப.ஆ.),வாழ்வியற் களஞ்சியம், ப. 592.

9.கோமதிசங்கர்,சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம், ப. 15.

10.கோ.வே. கீதா,தமிழ் நாவல்கள் ஓர் அறிமுகம், ப. 205.

11.அ. சோமசுந்தரன்,நீல. பத்மநாபன் நாவல்கள் - ஒருதிறனாய்வு, ப. 32.

12.ப. யோகீசுவரன்,தமிழக் கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள், ப. 55.


http://Creativecommons.org//license/by/4.0/.